# பனித்துளி செய்திகள்!

**"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)**

**துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!**

(திங்கள்தோறும்)

**06.07.2020**

## 6. 'ஆண்டவரோடு' சமாதானமாய் இருப்பதே ஜெயவாழ்வு!

இவ்வுலகில் துன்பங்கள், உபத்திரவங்கள் வரும் வேளையில், தேவனுடைய சமூகத்திற்கு விரைந்து சென்று, மனதில் விளைந்த சஞ்சலங்களையும், சுய விருப்பங்களையும், அசுசிகளையும் அகற்றி **"இயேசுவோடு சமாதானமாய் இருப்பதை"** தன் சீஷர்களுக்கு அறிமுகப் படுத்தினார்! இதுவே, நாள்தோறும் அவர் சமூகம் சென்று, அவரோடு சமாதானம் தேடும் பங்காகி விட்டால், நாம் சந்திக்கும் சகல உபத்திர வங்களிலும் இயேசுவைப்போல், நாமும் உலகத்தை ஜெயித்து வாழ்ந்திட முடியும்! என, இயேசு வாக்குரைத்திருக்கிறார்! (யோ.16:33).

இவர்களையே 'பலவான்கள்' என்றும்! இவர்களே, **ஒருவருக்கொருவர் சமாதானத்தை** தங்கள் வீட்டிலும், சபையிலும் காப்பவர்கள் என்றும்! இயேசு அகமகிழ்ந்தார். (லூக்கா 11:21).

**- ரத்னம்**